[1979 மார்ச் 19

Archeological findings in Thiruppudaimarudhur temple

*Q. No. 464.— THIRU N. KITTAPA : Will the Hon· the Minister for Education be pleased to state :

(*a*) whether the Archeological Department of the Government of Tamll Nadu has found out sculptures depicting the relationship between Tamil Nadu and Arab Countries on the temple towers of Thiruppudaimarudhur temple in Tirunelveli district and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்து திருப்புடை மருதூரைச் சேர்ந்த சிவன் கோயிலில் வெளி கோபுரத்தில் கி. பி. 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் கோபுரத்தின் ஐந்து நிலைகளிலும் நல்ல நிலையில் காணப்படுகின்றன. ஓவியம் காணப்பெறும் கோவிலின் தலபுராணம் பற்றியும், சைவநாதன் மார்களைப் பற்றியும் மதுரை சொக்கநாதரின் திருவிளையாடல்களைப் பற்றியும், வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன அவைகளில் தமிழ்நாட்டுக்கும் அரபு நாடுகளுக்கும் வணிகத் தொடர்பு இருந்து வந்தது என்பதை விளக்கும் வகையில் அரபியக் கப்பல் ஒன்றில் குதிரைகளை ஏற்றி வருவதுபோன்றும் அந்தக்கப்பலில் அராபிய வணிகர்களின் உருவங்களும் காணப் படும் ஓவியங்களும் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்கும் வேறு நாடுகளுக்கும் தொடர்பு இருந்ததாகக் கூறப்படும் கல்வெட்டுக்கள் வேறு ஏதேனும் கோயில்களில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதா? குறிப்பாக, பூம்புகார் பகுதியிலே கூட அத் தகைய கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு, பண்டைய பூம்புகார் பகுதிக்கும் ஏனைய அயல்நாடுகளுக்கும் தொடர்பு இருந்ததாகக் கூறும் அத்தகைய கல்வெட்டுக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அத்தகைய முறையிலே வேறு ஏதாவது புதிய தகவல்களை அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே. அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் அறிவிக்க இயலும்.